இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 80 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 13 – வெள்ளிக்கிழமை 30 அக்டோபர் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 80 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 13 - Friday 30 October 2026 - Dak 12 Pages ₹ 5.00

'Punch dialogue' என்ற பெயரில் பல modulation -ல் காட்டுக்கத்து கத்த நடத்தப்படும் இந்த ரெய்டுகளைக் கண்டு

தி.மு.க.வின் கடைக்கோடித் தொண்டரின் கால்நகம் கூட அஞ்சாது!

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு மீது ரெய்டு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை!

சென்னை, அக். 30 -

" Punch dialogue என்ற பெயரில் பல Modulation-ல் காட்டுக்கத்து கத்த நடத்தப்படும் இந்த ரெய்டுகளைக் கண்டு தி.மு.க.வின் கடைக்கோடித் தொண்டனின் கால் நகம் கூட அஞ்சாது" என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்கள் மீது நடத்தப்படும் ரெய்டுகள் குறித்து விடுத்த சமூக வலைதளப் பதிவில் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் பிரச்சினைகளை திசை திருப்ப, அரசியல் பழிவாங்கும் நோக்கோடு தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.என். நேரு மீது DVAC சோதனையை விஜய் அரசு ஏவிவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் த.வெ.க. அரசு பதவி யேற்றது முதல், மக்கள் நலப்பணிகளில் கடுகளவும் கவனம் செலுத்தாமல் எதிர்க் கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கை களில் மட்டும் தீவிரமாக ஈடுபட்டு வருகி றது. அரசின் தோல்விகளை மூடிமறைக்க தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள் ளிட்டோர் மீது DVACஐ ஏவிவிடப்படுகிறது. ஏற்கனவே முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, செந்தில்பாலாஜி தொடர்பு டைய இடங்களில் DVACயை ஏவிவிட்டு த.வெ.க. அரசு சோதனை நடத்தியது.

முதலமைச்சர் விஜய் எப்போதெல் லாம் பிரச்சினைகளில் சிக்கிக்கொள் கிறாரோ, அப்போதெல்லாம் தி.மு.க. மீது



DVACஐ ஏவி விட்டு வருகிறார். தமிழ்நாட் டில் நாள்தோறும், அரிவாள் வெட்டு, கொலை, கொள்ளை, பாலியல் வன் கொடுமைகள் அரங்கேறி வருகின்றன. சிறைச்சாலைகளில் இருந்து அடுத் தடுத்து கைதிகள் தப்பி ஓட்டம் என மாநி லத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. விண்ணை முட்டும் விலைவாசி உயர் வால் மக்கள் கடும் கொந்தளிப்பில் உள்ள நிலையில், அதனை திசைதிருப்ப DVACஐ விஜய் ஏவிவிட்டுள்ளார்.

விஜய் ஆட்சியில் தமிழ்நாட்டில் சிறை, பள்ளி, சாலை, நீதிமன்றம் என எங்கும் பாதுகாப்பில்லை! சட்டம் ஒழுங்கு பற்றி யெல்லாம் முதலமைச்சருக்கு அக்கறை இல்லை குற்றவாளிகளுக்கு பயமில்லை. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் விஜய் அரசு தோல்வியடைந்துவிட்டது.

இந்நிலையில், மக்கள் பிரச்சினை களை திசைதிருப்ப தி.மு.க. மீது DVACஐ விஜய் ஏவிவிட்டுள்ளார். அதன்படி, முழுக்க முழுக்க அரசியல் காரணங் களுக்காகவே கே.என்.நேரு மீது த.வெ.க. அரசு லஞ்ச ஒழிப்புத்துறையை ஏவி விட்டுள்ளது.

திருச்சி கிழக்கு தொகுதிக்கு விரைவில் இடைத்தேர்தல் அறிவிக்கப்படவுள்ள நிலையில், தி.மு.க. நிர்வாகிகளின் நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகை யில் த.வெ.க. அரசு லஞ்ச ஒழிப்புத்து றையை ஏவி விட்டுள்ளது. அரசியல் பழி வாங்கும் நோக்கத்துடன், தி.மு.க. ஆட்சி யில் ஊழல் என இதுவரை தொடரப்பட்ட ஒரு வழக்கில் கூட குற்றச்சாட்டு நிரூபிக்க முடிந்ததில்லை என்பதே வரலாறு.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

பெண்கள், குழந்தைகள், முதியோர் என யாருமே பாதுகாப்பாக இல்லாத மாநிலமா கத் தமிழ்நாட்டை மாற்றிவிட்ட முதலமைச் சர், மக்களின் கவனத்தையும் ஊடகங் களின் Breaking Newsஐயும் திசைதிருப்ப Roadshow நடத்தலாமா? Raidshow நடத் தலாமா? எனச் சிந்தித்துக் கொண்டிருக் கிறார்.

"Vettri Vendetta Politics" மக்கள் முன் தலைகுனிந்து நிற்கும்!

ஊழல் பெருச்சாளிகளை எல்லாம் பேரக் குதிரைகளாக மாற்றி தன் கட்சியில் இணைத்துக் கொண்டிருக்கும் த.வெ.க. எனும் "TN Branch Washing Machine", தி.மு.க. ஆட்சியின் முன்னாள் அமைச்சர் களை மட்டும் குறிவைத்து நடத்திக் கொண் டிருக்கும் "Vettri Vendetta Politics" திட் டம், வழக்கம் போல் சட்டத்தின் முன் தோற்று, மக்கள் முன் தலைகுனிந்து நிற்கும்!

திருச்சி கிழக்கு இடைத்தேர்தலுக்கான ரீல்ஸ் விடியோக்களைத் தயாரிக்கவும் முதலமைச்சர் மேடையில் punch dialogue என்ற பெயரில் பல modulationஇல் காட்டுக்கத்து கத்தவும் நடத்தப்படும் இந்த ரெய்டுகளைக் கண்டு தி.மு.க.வின் கடைக்கோடிக் தொண்டரின் கால் நகம் கூட அஞ்சாது!

இந்திய நாடே எள்ளி நகைக்கிறது!

சட்டம்ஒழுங்கு சீர்கேடு, துருப் பிடித்து விட்ட நிர்வாகம், வாட்டி வதைக்கும் விலை வாசி உயர்வு என மக்களை பாதித்துக் கொண்டிருக்கும் இந்த த.வெ.க. ஆட்சி யைக் கண்டு, தமிழ்நாடு மட்டுமல்ல இந்திய நாடே எள்ளி நகைக்கிறது.

வண்டவாளங்களைத் தண்டவாளம் ஏற்றுவோம்!

இதை எல்லாம் மறைக்க, தி.மு.க. வினருக்கு வாய்ப்பூட்டு போடலாம் என்று

> **"ஊழல் பெருச்சாளிகளை எல்லாம் பேரக் குதிரைகளாக மாற்றி தன் கட்சியில் இணைத்துக் கொண்டிருக்கும் த.வெ.க. எனும் "TN Branch Washing Machine", தி.மு.க. ஆட்சியின் முன்னாள் அமைச்சர்களை மட்டும் குறிவைத்து நடத்திக் கொண்டிருக்கும் "Vettri Vendetta Politics" திட்டம், வழக்கம் போல் சட்டத்தின் முன் தோற்று, மக்கள் முன் தலை குனிந்து நிற்கும்!"**

நினைக்கிறீர்கள். இனி இன்னும் இன்னும் வேகமாக த.வெ.க. அரசின் வண்டவாளங் களைத் தண்டவாளம் ஏற்றுவோம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு - பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை – விலைவாசி உயர்வைக் கண்டித்து!

தி.மு.க. மகளிர் அணி சார்பில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. உள்ளிட்ட கழக மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, அக்.30-

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு - பெண் கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை- மற்றும் விலைவாசி உயர்வைக் கண் டித்து தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், நாளை (31.10.2026) நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்டத்தில் நடை பெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத் தில் கழக துணைப் பொதுச் செயலாள ரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற் கிறார்.

இம்மாபெரும் ஆர்ப்பாட்டம் மற்றும் இவ்வார்ப்பாட்டங்களுக்கு மாவட்டங் களில் தலைமையேற்போர் குறித்து தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :-

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற் பனை ஆகியவை அதிகரித்து சட்டம் ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதி ரான வன்முறை மற்றும் குழந்தை கள் கடத்தல் ஆகியவை மிகப்பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக இந்த ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தைப் படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க. அரசைக் கண் டித்து தி.மு.க. மகளிர் அணியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (31.10.2026 சனிக் கிழமை) காலை 10.00 மணியள வில் அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் நடைபெறும் என்று தி.மு.க. தலைமைக் கழகம் அறி வித்திருந்தது.

அந்தந்த மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் தலைமையில்



நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத் தில் கீழ்க்கண்டவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்று வார்கள்.

1. சென்னை வடக்கு - கழக துணைப் பொதுச் செயலாளர் **கனிமொழி ராஜாத்தி கருணாநிதி**, வனிதா குமாரி
2. கன்னியாகுமரி ஹெலன் டேவிட்சன், நாஞ்சில் சிபி
3. சேலம் நாமக்கல் ராணி.
4. தூத்துக்குடி கீதா ஜீவன், ஜெஸி பொன் ராணி
5. கோயம்புத்தூர் வீரமணி J.K, கலாவதி
6. திருவாரூர் தமிழரசி ரவிக் குமார், அஞ்சுகம் பூபதி
7. மதுரை பவானி ராஜேந்திரன், வழக்கறிஞர் ஷாமிலி பிரபா,
8. சென்னை தெற்கு விஜயா தாயன்பன், டாக்டர் கனிமொழி சோமு, ராணி ரவிச்சந்திரன், ரத்னா, டாக்டர் யாழினி P.M
9. காஞ்சிபுரம் பிரியா ராஜன், நிவேதா ஜெசிகா
10. நாகப்பட்டினம் ஆண்டாள் பிரியதர்ஷினி
11. தேனி திவ்யா சத்யராஜ்
12. திருச்சிராப்பள்ளி விஜிலா சத்யானந்த், கவிதா
13. கள்ளக்குறிச்சி ரேகா பிரிய தர்ஷினி, டாக்டர் மலர்விழி,
14. செங்கல்பட்டு சேலம் சுஜாதா
15. கடலூர் - அங்கையற்கண்ணி
16. தஞ்சாவூர் காரல் மார்க்ஸ், அனிச்சம் கனிமொழி
17. கிருஷ்ணகிரி சுஜாதா, ஸ்ரீலேகா
18. அரியலூர் A.ரியா
19. ஈரோடு நாக நந்தினி, கலை செல்வி
20. இராணிப்பேட்டை அமுலு விஜயன்
21. கரூர் நிரஞ்சனா செந்தில்குமார், கவிதா கல்யாண சுந்தரம்
22. திருப்பத்தூர் கவிதா தண்ட பாணி, ராஜராஜேஸ்வரி
23. திருப்பூர் மாலதி நாகராஜ், கயல்விழி செல்வராஜ், சத்யா பழனிக்குமார், உமா மகேஷ் வரி,
24. திருவண்ணாமலை T.R. காயத்ரி
25. பெரம்பலூர் மகாதேவி ஜெயபால்
26. புதுக்கோட்டை கலைமணி பாரதி, தெய்வானை, உஷா ராணி
27. மயிலாடுதுறை தீன்ஷா
28. விருதுநகர் வழக்கறிஞர் ஸ்ரீநிதி,
29. விழுப்புரம் தேன்மொழி, பெனாசீர்
30. வேலூர் டாக்டர் மாலதி
31. தென்காசி சாஷா, திவ்யா மணி கண்டன்
32. தர்மபுரி ரோஜா
33. திண்டுக்கல் கிருத்திகா தங்க பாண்டி, லக்ஷிகா வேலுமணி, சித்ரா
34. திருநெல்வேலி முத்துசெல்வி, ரஹீமா
35. திருவள்ளூர் டாக்டர் கிருத்திகா
36. நாமக்கல் டாக்டர் கோகிலா மணி
37. நீலகிரி - வைஷ்ணவி

இவ்வாறு அந்த அறிவிப்பில் தலைமைக்கழகம் தெரிவித்துள்ளது.